



சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எழும்பூர் வடக்கு பகுதி தேர்தல் பணிமனையை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர், கோ ஏகப்பன், புனிதவதி எத்திராசன் எம்.சி., கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பரிதி இளம் சுருதி எம்.சி., பி.எம். யாழினி, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன் எம்.சி., கோ.மணி மற்றும் கழக நிர்வாகிகள், தோழமை கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### நெல் கொள்முதல் செய்யும்போது

# நெல்லின் ஈரப்பதம் 22 சதவிகிதமாக ஒன்றிய அரசு உயர்த்துமா?

## மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி!



புதுடெல்லி,மார்ச்.28-

பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது டாக்டர்.கலாநிதி வீராசாமி அவர்கள் ஒன்றிய அரசு நெல் கொள்முதல் செய்யும் போது தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 17 சதவிகித ஈரப்பதத்தை 22 சதவிதமாக உயர்த்த ஒன்றிய அரசு முன் வருமா என்று கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் பேசியதாவது :

இந்தியாவில் 80 சதவிகித விவசாயிகள் ஒரு ஹெக்டேர் நிலத்துக்கும் குறைவாகப் பெற்றுள்ள சிறு விவசாயிகளாக உள்ளனர், பருவ காலங்களில் பெய்யும் மழையைச் சார்ந்த அவர்களது வாழ்க்கை அமைந்துள்ளது. இயற்கை இடர்பாடுகளில் இருந்து தங்கள் பயிரைக் காக்க, கடவுளை வேண்டிக் கொள்கின்றனர். விவசாயிகளின் நிலைமையை யாரும் அறிந்து கொள்வதில்லை, நாட்டில் விவசாயிகள் பெரும் எண்ணிக்கையில் தற்கொலை செய்து கொள்கிறார்கள், அவர்களிடம் நான் நெருங்கிப் பழகி, அவர்கள் நிலையை அறிந்து கொள்ள முற்பட்டபோது, எனக்கு அதிர்ச்சியான தகவல் கிடைத்தது. வானம் பொய்த்து, மழை இல்லாத காலங்களில் விவசாயம் பாதிக்கப்படும்போது, விவசாயிகள் வசிக்கும் ஊர்களில், திருமணம் அல்லது விழாக்கள் நடைபெறும் போது, அத்திருமணங்களில் கலந்து கொண்டு 'மொய் 'வழங்க வேண்டும் என்கின்ற நிலை ஏற்படும் போது, மொய் பணம் திரட்ட முடியாத சில விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். தமிழகத்தில் மொய் என்று சொல்லப்படுவது, வட இந்தியாவில் பிந்தி என்று சொல்கிறார்கள் ஆக, நாடு முழுவதும், இந்த நிலை பரவலாகக் காணப்படுகிறது. இது போன்ற விவசாயிகளின் துயர் துடைக்க , எங்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அரசு நெல் கொள்முதல் செய்யும் போது, அதன் ஈரப்பத அளவை 17 சதவிகிதத்தில் இருந்து 22 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்று ஒன்றிய அரசைக் கேட்டுக் கொண்டார்.

முதலில் இதற்கு ஒப்புதல் தருவதாக சொன்ன ஒன்றிய அரசு பின்னர் தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டு ஈரப்பத அளவை 22 சதவிகிதமாக உயர்த்துவதற்கு மறந்து விட்டது. நாங்கள் தங்களிடமிருந்து தமிழ்நாட்டுக்காக எந்த கொடையையும் கேட்கவில்லை இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகளின் நலத்துக்காக , நெல்லின் ஈரப்பத அளவை உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறோம். எங்கள் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அவரது ஆட்சிக் காலத்தில் ரூ. 4000 கோடி அளவில் விவசாயிகளின் கடனை ரத்து செய்தார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தனது பதிலுரையில், ஒன்றிய அரசு கடந்த 202324 பட்ஜெட்டில், விவசாயத்திற்காக ரூ.13,625 கோடி ஒதுக்கப்பட்டதாகவும், பின்னர் திருத்திய மதிப்பீட்டில் அது ரூ.15,000 கோடியாக உயர்த்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், உண்மையில் அந்த ஆண்டு, ரூ. 12,948.5 கோடி தான் செலவிடப்பட்டதாக ஒன்றிய அரசின் நிதித்துறை தெரிவித்துள்ளது. இது, அரசு ஒதுக்கீடு செய்திருந்த தொகையை விட குறைவானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

அடுத்ததாக, விவசாயிகளுக்குப் பயிர்காப்பீடு (இன்ஸ்யூரன்ஸ்) வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று அமைச்சர் அவர்கள் கூறினார். ஆனால், நிதி அறிக்கையில், அரசு இன்ஸ்யூரன்ஸிற்காக ஒதுக்கியுள்ள நிதி முழுமையாக செலவிடப்படவில்லை. ஏனெனில் நீங்கள் விவசாயிகளின் மனுக்களை, ஒரு இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி ஆய்வு செய்வது போல ஆய்ந்து, விவசாயிகளின் மனுக்களில் உள்ள குறைபாடுகளைக் கணக்கிட்டு, இன்ஸ்யூரன்ஸ் தொகையை குறைப்பது அல்லது கொடுக்க மறுப்பதால், அந்த நிதி முழுமையாக விவசாயிகளைச் சென்று சேர்வதில்லை. இப்படி, செய்தீர்களானால் விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கையை குறைக்க முடியுமா என்பதை எண்ணிப் பாருங்கள். விவசாயிகள் இன்ஸ்யூரன்ஸ் கோரிக்கை 21 நாட்களில் முடித்து வைக்கப்படுகிறது என்று அமைச்சர் கூறுகின்றனர். ஆனால், நிதியாண்டு முடிந்த பின்பும், பலரது கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன என்று அரசு கூறும் தகவல்களில் இருந்து தெரிகின்றது.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி உரையாற்றினார்.

### தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ்

# தாய்மார்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – தே.மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 28-

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் எழுப்பிய கேள்வி பின்வருமாறு :-

தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ் குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த ஒன்றிய அரசு எடுக்கப்பட்ட முயற்சிகள் என்ன?

நிர்ணயிக்கப்பட்ட நோக்கத்தின் கீழ் வலுப்படுத்தப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட அங்கன்வாடி மையங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

ஊட்டச்சத்துக் குறைபாடு விகிதங்கள், சேவை வழங்கல் மற்றும் பயனாளிகளின் திருப்தியைக் கண்காணிக்க செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து சமூகங்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

சிறந்த விளைவுகளுக்காக ஊட்டச்சத்து இயக்கத்தை சுகாதாரம், தூய்மை மற்றும் கல்வித் திட்டத்துடன் ஒருங்கிணைக்க முன்மொழியப் பட்ட முயற்சிகளின் விவரங்கள் என்ன?

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.

### ஆர்.எஸ்.பாரதி – ஆர்.டி.சேகர் சிறப்புரை! கலாநிதி வீராசாமி – கன்னிகை ஜி.ஸ்டாலின் முன்னிலை!

# பெரம்பூர் தெற்கு பகுதி பாகமுகவர்கள் - தகவல் தொழில்நுட்ப முகவர்கள் கூட்டம்!

## பகுதிக் கழகச் செயலாளர் க.ஜெயராமன் அறிக்கை!

சென்னை, மார்ச்.28-

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதிச் செயலாளர் க.ஜெயராமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு-

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதிக் கழக பாக முகவர்கள்-2 பாக தகவல் தொழில்நுட்ப முகவர்கள் பாக இளைஞரணி முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (28.3.2026 - சனிக்கிழமை) மாலை 6:00 மணி அளவில் பெருந்தலைவர் காமராஜர் திருமண மண்டபத்தில் 44வது வட்டத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதி கழகச் செயலாளர் க.ஜெயராமன் தலைமை வகிக்கிறேன்.

கலாநிதி வீராசாமி எம்.பி., கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் ஆகியோர் சிறப்புரையாற்று கிறார்கள்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் மற்றும் BLA-2, BDA, BYA நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதியாக செயலாளர் க.ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

### சென்னை கிழக்கு மாவட்டம்

# கொளத்தூர், துறைமுகம், எழும்பூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் பகுதிக்கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், **கொளத்தூர், துறைமுகம், எழும்பூர்** ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் பகுதிக்கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் 28.3.2026, **சனிக்கிழமை இன்று** நடைபெறும் விவரம் பின்வருமாறு:

| நாள் | தொகுதி | இடம் |
|---|---|---|
| 28.3.2026 சனிக்கிழமை காலை 10.00 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதி | எண்.7, செல்லப்பா தெரு, ஓட்டேரி, சென்னை–12 |
| 28.3.2026 சனிக்கிழமை காலை 10.45 மணி | எழும்பூர் சட்டமன்ற தொகுதி | |
| 28.3.2026 சனிக்கிழமை காலை 11.30 மணி | கொளத்தூர் சட்டமன்ற தொகுதி | |

மேற்கண்ட ஆலோசனை கூட்டத்தில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட பகுதி கழக செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக்கழக செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### இந்தியா – அமெரிக்கா புதிய வர்த்தக ஒப்பந்தத்தின் விளைவால் ஏற்படும் பாதிப்புகளுக்கு

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி,மார்ச்.28-

இந்தியா அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்தின் விளைவால் ஏற்றுமதியில் ஏற்படும் பாதிப்புகளுக்கு ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன? என்றும் இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரான அமெரிக்க அதிபரின் கருத்துக்கு ஒன்றிய அரசின் எதிர்ப்பு நடவடிக்கை என்ன? என்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு எஸ்.ஜெய்சங்கருக்கு கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. கேள்விகள் எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

"இந்தியா வரிகளைச் செலுத்தும், ஆனால் அமெரிக்கா செலுத்தாது" என்று அமெரிக்க அதிபர் வெளிப்படையாக அறிவித்ததை ஒன்றிய அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டதா? இது இந்தியாவின் உண்மையான பேச்சுவார்த்தை நிலைப்பாட்டைப் பிரதி பலித்தால் அது குறித்த விவரங்கள் என்ன?

கடந்த பிப்ரவரி 2ஆம் தேதி கையெழுத்திடப்பட்ட இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்தின் முழுமையான உரை மற்றும் வரி பட்டியலின் (*tariff schedule*) விவரங்கள் என்ன? இதனால் ஏற்பட்ட துறைசார்ந்த தாக்கம் மற்றும் இந்தியா பெற்ற பரஸ்பர சலுகைகள் என்ன?

பரஸ்பர வரிகளுக்கு எதிராக அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பிறகு 'பிரிவு 122' இன் கீழ் மாற்று வரிகள் விதிக்கப்பட்ட சூழலில், இந்திய ஏற்றுமதிகளை சட்ட ரீதியாக பாதுகாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

இந்தியாவின் இறையாண்மைக்கு எதிராக, எண்ணெய் கொள்முதல் மற்றும் நாட்டின் பாதுகாப்பு விவகாரங்களுடன் வரிகளை இணைத்து அமெரிக்கா கூறியதற்கு, இந்தியா முறையாக எதிர்ப்பு தெரிவித்ததா? இந்தியா - பாகிஸ்தான் பிரச்சனையில் தலையீடு செய்வதாக கூறியதற்கும் எதிர்ப்பு தெரிவித்ததா?

அமெரிக்கா மீண்டும் ஒரு தலைப்பட்சமாக வரி விதிப்பு வழிமுறைகளை மாற்றியமைக்க நேரிட்டால் இந்திய ஏற்றுமதியாளர்களையும் இந்தியாவின் தற்சார்பையும் பாதுகாக்க ஒன்றிய அரசிடம் திட்டம் உள்ளதா?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வ.உ.சி. துறைமுக மெகா கண்டெய்னர் டெர்மினல் திட்டம் தாமதமா?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கேள்வி



புதுடெல்லி, மார்ச். 28

தென் சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மக்களவையில் துறை முகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்திடம் தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தில் அமைக்கப்படவுள்ள வெளித் துறைமுகம் மற்றும் மெகா கண்டெய்னர் டெர்மினல் திட்டம் குறித்து பல்வேறு கேள்விகளை முன்வைத்தார்.

அதாவது, பிரேக் வாட்டர், ட்ரெட்ஜிங், நிலம் நிரப்புதல் உள்ளிட்ட பணிகளை உள்ளடக்கிய இந்த திட்டம் தனியார் நிறுவனங்களின் தோல்வியுற்ற டெண்டர்களால் தாமதமடைந்ததா? திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் காலக்கெடு என்ன? சுமார் ரூ.9,860 கோடி மதிப்பீட்டில் இருந்த திட்டம் தற்போது PPP-HAM (Hybrid Annuity Model) முறையில் செயல்படுத்த முன்மொழியப் பட்டுள்ளதா?

மேலும், இந்த தாமதம் தமிழ்நாட்டின் ஏற்றுமதி மற்றும் இடைநிலைக் கடத்தல் (*transshipment*) திறனை பாதித்ததா? திட்டத்தை காலக்கெடுவில் நிறைவு செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? ஆகிய கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு மத்திய துறை முகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்த சோனோவால் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில்:

துறைமுகம் மற்றும் மெகா கண்டெய்னர் டெர்மினல் திட்டத்திற்கு வெளியிடப்பட்ட ஆரம்ப டெண்டர்கள், தகுதிச்சான்று நிபந்தனைகளை நிறுவனங்கள் பூர்த்தி செய்யாததால் ரத்து செய்யப்பட்டன. பின்னர் மீண்டும் டெண்டர் அழைக்கப்பட்ட போதும் உரிய பதில் கிடைக்கவில்லை.

இதையடுத்து, திட்ட நிபந்தனைகள் மறுசீரமைக்கப்பட்டு, சந்தை தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டத்தின் நடைமுறை சாத்தியம் மேம்படுத்தப்பட்டுள்ளது. தற்போது திட்டச் செலவு சுமார் ரூ.14,690.76 கோடியாக திருத்தப்பட்டு, PPP-Hybrid Annuity Model (HAM) முறையில் செயல்படுத்த முன்மொழியப் பட்டுள்ளது.

இது பொருளாதார விவகாரத் துறையின் வழிகாட்டுதலின்படி மதிப்பாய்வு அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட்டு, புதிய டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது.

டெண்டருக்கு உரிய பதில் கிடைப்பதையும், ஏல செயல்முறை வெற்றிகரமாக நிறைவு பெறுவதையும் பொருத்தே திட்டத்தின் செயல்பாடுகளில் முன்னேற்றம் அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 - 25ஆம் ஆண்டில் வ.உ.சி. துறைமுகம் 41.72 மில்லியன் டன் சரக்குகளை கையாண்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுக்கு சுமார் 5% வளர்ச்சி பதிவாகியுள்ளது. தற்போதைய சரக்கு கையாளும் திறன் போதுமானதாக உள்ளதுடன், எதிர்கால கண்டெய்னர் கையாளும் தேவைகளை இந்த துறைமுக திட்டம் பூர்த்தி செய்யும் எனவும் மத்திய அரசு பதிலில் தெரிவித்துள்ளது.

### ஜி.கருணாகரன் தலைமை! இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# எழும்பூர் அ.ஜெகன் இல்ல மணவிழா வரவேற்பு!

## அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு - கோவி.செழியன் வாழ்த்து! தயாநிதி மாறன் எம்.பி. - இரா.கிரிராஜன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, மார்ச்.27 ,

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி, 76 வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.ஜெகனின் சகோதரியும், வி.அறிவழகன்ஏ.சித்ரா ஆகியோரின் புதல்வியுமான அ.பூர்ணிமா வெ. கார்த்திக் ஆகியோரின் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நாளை (29.3.2026ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, சென்னை புரசைவாக்கம், குயப்பேட்டை, சச்சிதானந்தம் தெருவில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா மாளிகையில் (வசந்தி தியேட்டர், டோபிகண்ணா) நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்பிற்கு சூளை ஜி.கருணாகரன் தலைமை வகிக்கிறார். இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

மணமக்களை மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர் பாபு, அமைச்சர் கோவி.செழியன், வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி., மேயர் பிரியா, தாயகம் கவி எம்.எல்.ஏ., துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார், பகுதி செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர், செ.தமிழ் வேந்தன், மு.சாமி கண்ணு மற்றும் கே.எஸ்.எம். நாதன், கோ.ஏகப்பன், க.நந்தீஸ்வரன், பரிதி இளம் சுருதி,வானவில் ஆர்.விஜய், க. வினோத்,ஆர்.டி.சங்கர்நானா, த.ஜெய்குமார், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், ஜி.சேகர், வி.அபாய், தீ.தயாளன், வி.விஜயகுார், ஆர்.பாபு, இ.மெய்தீன், டால்பின் எஸ். அரி, எல்.சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன், ஆர்.அரிபாபு, மு.கிருஷ்ணமூர்த்தி, வெ.சம்பத், உஷா ஜெகதீசன், த.பொற்செழியன், ப.கருணா நிதி, க.ஜெகதீசன், எஸ்.தனசேகர், வி.முரளி, வெ.விவேகானந்தன், மு.பாலாஜி, ப.பன்னீர்செல்வம், தீ.சதீஷ்குமார், ஏ.வேலன், க.லோகேஷ், கோ.கௌசிக் வீரா,பா.லட்சுமணன், ம.பத்ரி நாராயண், சே.நவீன், கி.ஸ்ரீநிவாசப் பெருமாள், ஜெ.விஜயகுமார், சூளைநேரு, ஆர். புருஷோத்தமன், ஜெ.கிருஷ்ணமூர்த்தி, வி.நாகராஜ், எம்.இ. தேவநிதி, வெ. மருதன், ம.காந்தி, மு.கமலகண்ணன், புரசை எஸ்,குமார், சூளை எஸ்.ராஜேந்திரன், மு.முரளிதரன், எழும்பூர் எஸ்.சிவராஜ், மு.குமரன், ஏ.கவிதா,எ.சத்யாகலா, எம்.ஜெயந்தி, சு.இளமுகில், ஜெ.தீலிபன், நேரு பிரபாகரன், வ.தமிழ்அன்பன்,எம். கோபி, அ.சிவக்குமார்,எஸ். தீபா,வி.செல்வி, வி.ஹரிதா, என்.தினேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

புஷ்பலதா சூளைநேரு, சித்ராஅறிவழகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.